**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**திருக்கழுக்குன்றம்.**

முன்னிலை :– **திரு.S.வினீத், B.A.,B.L., (Hon's)**
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் குற்றவியல் நடுவர்,
திருக்கழுக்குன்றம்.

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 31 ம் நாள் வெள்ளிக்கிழமை
பராபவ வருடம் ஆடி மாதம் 15 ம் நாள்

**ஆண்டு பட்டிகை வழக்கு எண் 130/2016**
**CNR No. TNCG120004702016**

அரசு தரப்பில்
காவல் ஆய்வாளர்,
மதுவிலக்கு அமல் பிரிவு, மாமல்லபுரம்,
குற்ற எண் 229/2016. .. குற்றமுறையிடுபவர்.

எதிர்

செல்வி, வயது 47/2016, க/பெ. ஆறுமுகம்.
.. எதிரி.

**Case Summary**

| Sl. No | Particulars | Report |
|---|---|---|
| 1 | The Period of remand of the accused | 05.05.2016 to 06.06.2016 |
| 2 | The date of filing of the complaint/final report in the Court | 30.11.2016 |
| 3 | The date of committal of the case to the Court of Session | Not Applicable |

<table>
<tr><td>4</td><td>The date of questioning of the accused under Sections 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be</td><td>14.03.2022</td></tr>
<tr><td>5</td><td>Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like petitions under Section 317 of the Code:</td><td>Nil</td></tr>
<tr><td>6</td><td>Date of examination in-chief and cross- examination of a witness:</td><td><table><tr><td></td><td>Chief</td><td>Cross</td></tr><tr><td>PW1</td><td>29.01.2026</td><td>29.01.2026</td></tr><tr><td>PW2</td><td>06.07.2026</td><td>06.07.2026</td></tr><tr><td>PW3</td><td>20.07.2026</td><td>20.07.2026</td></tr></table></td></tr>
<tr><td>7</td><td>Date of examination of the accused under Section 313 of the Code:</td><td>28.07.2026</td></tr>
<tr><td>8</td><td>Details of abscondence of an accused and his appearance/productions, as the case may be: and NBW Pending /recalled</td><td>NIL</td></tr>
<tr><td>9</td><td>Grant of stay by superior Courts and the results thereof.</td><td>NIL</td></tr>
</table>

இவ்வழக்கு 30.11.2016 ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர் நிலை 1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ரவி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப்

பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

**1.** எதிரி மீது, அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள குற்ற அறிக்கையில், கடந்த 05.05.2016 ம் தேதி காலை 7.30 மணியளவில் கூவத்தூர் பேட்டை நாவக்கால் காலணி பனஞ்சாலையில் எதிரி செல்வி எந்தவித உரிமமும் இன்றி சட்டத்திற்கு புறம்பாக ஒரு கோணிப்பையில் சுமார் 100 எம்.எல். அளவு கொண்ட 550 பாக்கெட்டுக்கள் வீதம் இரண்டு கோணிப் பைகளில் 1100 பாக்கெட்டுக்கள் மொத்தம் 110 லிட்டர் நீர் கலந்த எரிசாராயம் வைத்திருந்த குற்றத்திற்காக எதிரி சட்டப்பிரிவு 4(1)(aaa) TNP Act r/w 6 & 11 of RS Rules 2000–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2.** எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானதும் அவருக்கு வழக்காவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3.** எதிரிக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ய போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்து, ஆவணங்களின் அடிப்படையில் எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(aaa) TNP Act r/w 6 & 11 of RS Rules 2000–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக்கூறி வினவியபோது குற்றச்சாட்டினை மறுத்தார். எதிரியின் குற்ற மறுப்பினையடுத்து அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**4.** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள்

விசாரித்தும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையும், அ.சா.பொ.1 ம் குறியீடு செய்து வழக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

**5.** அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சாராம்சம் பின்வருமாறு:–

கடந்த 05.05.2016 ம் தேதி காலை 7.30 மணியளவில் அ.சா.3 சரவணன் காவல் ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அ.சா.3, CIU உதவி ஆய்வாளர் சின்னதுரை, காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் புன்னியக்கோட்டி மற்றும் அ.சா.1 பெண் தலைமை காவலர் 1270 சுமதி, அ.சா.2 தலைமை காவலர் 228 சுரேஷ் ஆகியோர் சகிதம் திருக்கழுக்குன்றம் நெரும்பூர் ஆயப்பாக்கம் ஆகிய இடங்களில் கண்காணித்துவிட்டு நாவாக்கால் கூவத்தூர் பேட்டை பனஞ்சாலையில் கண்காணித்தபோது ஒரு வீட்டிற்கு அருகில் சந்தேகப்படும் படி ஒரு பெண் நபர் கோணி பைகளுடன் நின்றுக் கொண்டிருந்தவரை சந்தேகப்பட்டு அருகே செல்ல முயன்றபோது தப்பி ஓட முயன்ற அந்த நபரை மடக்கி பிடித்து விசாரித்தபோது அவர் பெயர் செல்வி என்று கூறினார் என்றும், எதிரி இருந்த இடத்தை சோதனை செய்து பார்த்தபோது கோணிபையில் சுமார் 100 மி.லி அளவு கொண்ட 550 பாக்கெட்டுக்கள் வீதம் 2 கோணி பையில் 110 பாக்கெட்டுக்கள் மொத்தம் 110 லிட்டர் திரவம் இருந்ததால் எதிரியை கைது செய்து வழக்கு சொத்தினை கைப்பற்றி பொது ஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் போலிஸ் சாட்சிகளான அ.சா.1, அ.சா.2 ஆகியோர் முன்னிலையில் மேற்படி வழக்கு சொத்துக்களை மகஜரில் கைப்பற்றி அதிலிருந்து இரசாயன பகுப்பாய்விற்காக இரண்டு கோணிப் பைகளில் இருந்து 500 எம்.எல் அளவு கொண்ட 2 பிளாஸ்டிக் பாட்டில்கள்

வீதம் மொத்தம் 4 பிளாஸ்டிக் பாட்டில்களில் மாதிரிக்கு எடுத்து சீல் வைத்து லேபிள் ஒட்டி மீதமுள்ள எரிசாராயத்தை அதே இடத்தில் கொட்டி அழித்து அழித்தல் சான்று தயார் செய்து எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து காவல் நிலைய குற்ற எண். 229/2016 சட்டப்பிரிவு 4(1)(aaa), 4(1-A) TNP Act r/w 6 & 11 of RS Rules 2000-ன் கீழ் வழக்கு பதிவு செய்து எதிரியை நீதிமன்றக் காவலுக்குட்படுத்தி மாதிரிக்கு எடுக்கப்பட்ட 4 பிளாஸ்டிக் பாட்டில்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி இரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பி வைத்து தடய அறிவியல் துறை உதவி இயக்குநர் சித்ரா என்பவரிடமிருந்து ரசாயன பகுப்பாய்வு சான்றினை பெற்று, ரசாயன பகுப்பாய்வு அறிக்கையில் நச்சுத் தன்மை கொண்ட பொருட்கள் எதுவும் இல்லை என்று குறிப்பிட்டிருந்ததால் வழக்கின் சட்டப்பிரிவினை 4(1)(aaa), 4(1-A) TNP Act r/w 6 & 11 of RS Rules 2000-லிருந்து 4(1)(aaa) TNP Act r/w 6 & 11 of RS Rules 2000-ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை மற்றும் வழக்கின் புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளார்கள். கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆகவும், அழித்தல் சான்று அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.4 ஆகவும், ரசாயன பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், மாதிரிக்கு எடுக்கப்பட்ட 4 பிளாஸ்டிக் பாட்டில்கள் அ.சா.பொ.1 வரிசை ஆகவும் குறியீடு செய்யப்பட்டது. இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**6.** இவ்வழக்கில் அரசுத் தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக

அமைந்த அரசு தரப்பு சாட்சிய பகுதிகளை எடுத்துரைத்து, கு.வி.மு.ச. பிரிவு 313(1), (ஆ)ன் கீழ் சுட்டிக்காட்டி வினவியபோது எதிரி அரசு தரப்பு சாட்சிகள் கூறுவது பொய் சாட்சி என்றும், இவ்வழக்கு பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார். எதிரி தரப்பு விசாரணை முடிக்கப்பட்டது.

**7.** கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகளின் சாட்சியங்களும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.பொ.1 வரையிலான சான்றாவணங்கள் வாயிலாக எதிரி சம்பவ தினத்தன்று எதிரி எந்தவித அரசு உரிமமோ அனுமதியோ இன்றி சட்டத்திற்கு புறம்பாக இரண்டு கோணிப் பைகளில் சுமார் 100 மி.லி. அளவு கொண்ட மொத்தம் 110 லிட்டர் நீர் கலத்த எரிசாராயம் விற்பனைக்காக வைத்திருந்தார் என்பது தெளிவாக தெரியவருகிறது என்றும், எனவே, எதிரி சட்டப்பிரிவு 4(1)(aaa) TNP Act r/w 6 & 11 of RS Rules 2000–ன் கீழ் குற்றவாளி என்று தீர்மானித்து அதிக பட்ச தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

**8.** கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், அரசு தரப்பில் புள்ளிவிவரக் கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளனர் என்றும், தனிநபர் சாட்சிகள் யாரும் இவ்வழக்கில் விசாரணை செய்யப்படவில்லை என்றும், எனவே, இவ்வழக்கு எதிரி மீது போடப்பட்ட பொய்யான வழக்கு என்றும், ஆகவே சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**9.** இவ்வழக்கில் தற்போது தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில்

எதிரி மீது வனையப்பட்டுள்ள சட்டப்பிரிவு 4(1)(aaa) TNP Act r/w 6 & 11 of RS Rules 2000–க்கான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

**9.1.** அரசு தரப்பில் இவ்வழக்கு சம்பவமாக கடந்த 05.05.2016 ம் தேதி காலை 7.30 மணியளவில் கூவத்தூர் பேட்டை நாவக்கால் காலணி பனஞ்சாலையில் எவ்வித உரிமமும் இன்றி சட்டத்திற்கு புறம்பாக இரண்டு கோணி பைகளில் சுமார் 100 மி.லி. அளவு கொண்ட தலா 550 பாக்கெட்டுக்கள் வீதம் 1100 பாக்கெட்டுக்கள் மொத்தம் 110 லிட்டர் நீர் கலந்த எரிசாராயம் விற்பனைக்காக வைத்திருந்தார் என்று எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

**9.2.** இவ்வழக்கானது காவல் ஆய்வாளர் சரவணன் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், மதுவிலக்கு அமல் பிரிவு போலிசார் மற்றும் CIU உதவி ஆய்வாளர் சின்னதுரை, சிறப்பு உதவி ஆய்வாளர் புண்ணியக்கோட்டி ஆகியோர் சகிதம் திருக்கழுக்குன்றம் நெரும்பூர் ஆயப்பாக்கம் ஆகிய இடங்களை கண்காணித்துவிட்டு கூவத்தூர் பேட்டை நாவக்கால் பனஞ்சாலையில் கண்காணித்தபோது கோணிப் பைகளுடன் நின்றிருந்த ஒரு பெண் நபர் மீது சந்தேகம் வரவே அருகே சென்று கண்காணிக்க முயலும்போது போலிசாரை கண்டதும் தப்பி ஓட முயன்றவரை மடக்கி பிடித்து எதிரி இருந்த இடத்தை சோதனை செய்தபோது ஒரு கோணிப்பையில் சுமார் 100 மி.லி. அளவு கொண்ட 550 பாக்கெட்டுக்கள் வீதம் இரண்டு கோணி பையில் 1100 பாக்கெட்டுக்கள் மொத்தம் 110 லிட்டர் திரவம் வைத்திருந்ததால் எதிரியை கைது செய்து பொது ஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் போலிஸ் சாட்சிகள்

முன்னிலையில் வழக்கு சொத்தை கைப்பற்றி அதிலிருந்து இரசாயன பரிசோதனைக்காக 500 எம்.எல் அளவு கொண்ட தலா 2 பிளாஸ்டிக் பாட்டில்கள் வீதம் மொத்தம் 4 பிளாஸ்டிக் பாட்டில்களில் மாதிரிக்கு எடுத்து சீல் வைத்து, மீதியை அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்திலேயே கொட்டி அழித்து, எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து எதிரி மீது காவல் நிலைய குற்ற எண். 229/2016 சட்டப்பிரிவுகள் 4(1)(aaa), 4(1–A) TNP Act r/w 6 & 11 of RS Rules–ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**9.3.** மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஐ கவனத்துடன் ஆழ்ந்து பரிசீலிக்கையில், காவல் ஆய்வாளர் சரவணன் (அ.சா.3) உடன், CIU உதவி ஆய்வாளர் சின்னதுரை, சிறப்பு உதவி ஆய்வாளர் புண்ணியக்கோட்டி மற்றும் மாமல்லபுரம் மதுவிலக்கு அமல் பிரிவு போலிசார் ஆகியோர் சகிதம் சம்பவ இடத்திற்கு சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி CIU உதவி ஆய்வாளர் சின்னதுரை, சிறப்பு உதவி ஆய்வாளர் புண்ணியக்கோட்டி ஆகியோர்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை. மற்றும் மாமல்லபுரம் மதுவிலக்கு அமல் பிரிவு போலிசாரை உடன் அழைத்து சென்றதாக தெரிவித்துள்ள நிலையில் அவர்களின் பெயரையோ, பதவியையோ குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை. அதேபோல் எதிரி வைத்திருந்ததாக சொல்லப்படும் திரவத்தை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றும் போதும் போலிஸ் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளதே தவிர போலிஸ் சாட்சிகள் யார் யார் என்று குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை. இவை அனைத்தும் அரசு தரப்பு வழக்கின் நம்பக தன்மையை ஆரம்ப

நிலையிலேயே பாதிப்பதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9.4.** இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலிக்கையில், அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கையில் 05.05.2016 ம் தேதி 7.30 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்து அ.சா.3 மற்றும் போலிஸ் பார்ட்டி சகிதம் மதுவிலக்கு வேட்டையாக சென்றதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அ.சா.ஆ.2 அழித்தல் சான்றில் 05.05.2016 ம் தேதி காலை 05.00 மணிக்கு அ.சா.3 மற்றும் போலிஸ் பார்ட்டி சகிதம் மதுவிலக்கு வேட்டையாக நிலையத்தில் இருந்து புறப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9.5.** அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகளின் வாயிலாக சம்பவ இடத்தில் பொது மக்கள் இருந்ததாக தெரியவருகிறது. ஆனால் எந்த ஒரு தனிப்பட்ட அக்கறையற்ற நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்து இறுதி அறிக்கை தாக்கல் செய்திருப்பது அரசு தரப்பு வழக்கின் நம்பகத் தன்மையை பாதிக்கிறது. மேலும், இவ்வழக்கில் சம்பவ இடம் பொறுத்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யாததும், எதிரியிடமிருந்து வழக்கு சொத்துக்களை கைப்பற்றியதற்கான ஆதாரமாக புகைப்படமோ அல்லது வழக்கு சொத்துக்களை கொட்டி அழித்ததற்கு ஆதாரமாக புகைப்படமோ, வீடியோவோ இவ்வழக்கில் தாக்கல் செய்யாததும் அரசு தரப்பு வழக்கை மேலும் பாதிப்பதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9.6.** மேலும், இவ்வழக்கில் எதிரி வைத்திருந்ததாக சொல்லப்படும் திரவத்திலிருந்து 05.05.2016 ம் தேதி இரசாயன பரிசோதனைக்காக கைப்பற்றப்பட்ட 4 பிளாஸ்டிக் பாட்டில்களை 13.10.2016 ம் தேதி தான் 5

மாதங்கள் காலதாமதமாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி காலதாமதம் குறித்து அரசு தரப்பில் எந்த வித விளக்கமும் அளிக்கப்படவில்லை. எனவே, அதுவும் அரசு தரப்பு வழக்கை பாதிப்பதாகவும், எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக சொல்லப்படும் தடய சொத்து குறித்தும் சந்தேகம் எழுவதாகவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9.7.** இவ்வழக்கில் அ.சா.1, அ.சா.2 இருவரும் மதுவிலக்கு வேட்டைக்ககாக அ.சா.3 வுடன் சம்பவ தினத்தன்று சென்றதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவும் இல்லை, மேலும் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் சம்பவ தினத்தன்று மதுவிலக்கு வேட்டையாக பணியில் இருந்தார்கள் என்பதை காட்ட அரசு தரப்பில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவும் இல்லை. எனவே, அ.சா.1 முதல் அ.சா.3 சம்பவ தினத்தன்று சம்பவ இடத்திற்கு சென்றார்களா என்பதை பொறுத்து சந்தேகம் எழுகிறது.

**9.8.** மேற்கண்டவாறு அரசு தரப்பு சாட்சிகளையும் சான்றாவணங்களையும் பரிசீலிக்கையில், அ.சா.1 முதல் அ.சா.3 சம்பவ தினத்தன்று பணியில் இருந்தார்கள் என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யாத நிலையிலும், அ.சா.3 னுடன் மதுவிலக்கு வேட்டைக்கு சென்றதாக சொல்லப்படும் CIU உதவி ஆய்வாளர் சின்னதுரை, சிறப்பு உதவி ஆய்வாளர் புண்ணியக்கோட்டி ஆகியோர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக சேர்க்கப்படாத நிலையிலும், தனி நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யப்படாத நிலையிலும், எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் தடய சொத்தினை ரசாயன பகுப்பாய்வு கூடத்திற்கு அனுப்ப ஏற்பட்டுள்ள அசாதாரண காலதாமதமும், மற்றும் மேலே விவாதித்த விவாதங்களின் அடிப்படையிலும், சம்பவ தினத்தன்று

எதிரி இரண்டு கோணிப் பைகளில் 100 எம்.எல் அளவு கொண்ட 1100 பாக்கெட்டுகள் மொத்தம் 110 லிட்டர் திரவத்தை விற்பனைக்காக வைத்திருந்தார் என்பதை தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக அரசு தரப்பில் நிரூபிக்க தவறிவிட்டது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இவ்வழக்கில் எழும் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு அளிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**10. முடிவாக**

மேற்குறிப்பிட்ட காரணங்களின் அடிப்படையில், எதிரி மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டினை அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து, எதிரி சட்டப்பிரிவு 4(1)(aaa) TNP Act r/w 6 & 11 of RS Rules 2000–ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**11.** இவ்வழக்கில் தடய சொத்தான P.I.No.117/2016 ல் உள்ள 4 பிளாஸ்டிக் பாட்டில்கள் வழக்கின் மேல் முறையிட்டுக்காலம் முடிந்த பின்னர் 4 பிளாஸ்டிக் பாட்டில்களில் உள்ள திரவத்தையும் பாட்டில்களையும் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

**12.** எதிரி ஏற்கனவே பிணையிலிருந்து வந்துள்ள நிலையில் மேல் முறையிட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல் முறையிடு செய்யவில்லை எனில் மேல் முறையிட்டு காலத்திற்கு பிறகு எதிரிகளின் பிணைப் பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜூலை மாதம் 31ம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(Sd) S.Vineeth, 31.07.2026
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
குற்றவியல் நடுவர், திருக்கழுக்குன்றம்.

பின் இணைப்பு:–

அரசு தரப்பு சாட்சிகள் அட்டவணை

| சாட்சிகள் | பெயர்கள் | சாட்சிகளின் விவரம் |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி. சுமதி | பெண் தலைமை காவலர்<br>கைப்பற்றுதல் மகஜர் சாட்சி. |
| அ.சா.2 | திரு. சுரேஷ் | தலைமை காவலர்<br>கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| அ.சா.3 | திரு. சரவணன் | காவல் ஆய்வாளர்,<br>புலன் விசாரணை அதிகாரி. |

அரசு தரப்பு சான்றாவணங்கள்:–

| ஆவண வரிசை | சான்றாவணங்கள் | யாரால் குறியீடு செய்யப்பட்டது |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 05.05.2016 தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 05.05.2016 தேதியிட்ட அழித்தல் சான்று | அ.சா.3 |
| அ.சா.ஆ.3 | 05.05.2016 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.4 | 05.05.2016 தேதியிட்ட படிவம் 91 | அ.சா.3 |
| அ.சா.ஆ.5 | 26.10.2016 தேதியிட்ட ரசாயன பகுப்பாய்வு அறிக்கை | அ.சா.3 |
| அ.சா.ஆ.6 | 26.11.2016 தேதியிட்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.3 |

<u>அரசு தரப்பு சான்றுப் பொருட்கள்</u>:–

| சான்றுப்பொருள் வரிசை | தடய சொத்து | யாரால் குறியீடு செய்யப்பட்டது |
|---|---|---|
| அ.சா.பொ.1 வரிசை | 4 பிளாஸ்டிக் பாட்டில்கள் | அ.சா.3 |

<u>எதிரி தரப்பு சாட்சி</u>:– இல்லை.

<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u>:– இல்லை.

<u>எதிரி தரப்பு சான்றுப் பொருள்</u>:– இல்லை.

(Sd) S.Vineeth, 31.07.2026
மா.உ.நீ.ம.கு.ந./தி.க.கு.